மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.53/2023

வாக்குமூலம்: பி.வா.சா.2 சுரேஷ்குமார்

<u>12.09.2024:</u> சாட்சி ஆஜர். சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு

<u>குறுக்கு விசாரணை :–</u> உங்கள் பெயர் சுரேஷ் அல்லது சுரேஷ்குமாரா என்றால் சுரேஷ்குமார். நீங்கள் நிரூபண வாக்குமூலத்தில் சுரேஷ் என்றும் சுரேஷ்குமார் என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் பெயரை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களுடைய பூர்வீக ஊர் என்னவென்றால் மேல்கரைப்பட்டி. உங்கள் பூர்வீக ஊர் ராஜம்பட்டி என்றால் சரியல்ல. நீங்கள் மேல்கரைப்பட்டில் மேற்கு தெருவில் வசிக்கிறீர்கள் என்றால் சரியல்ல, நடுத்தெருவில்தான் வசித்து வருகிறேன். வாதி, பிரதிவாதி வீடு எங்கு உள்ளது என்றால் எங்கள் வீட்டுக்கு எதிர்புறம்தான் உள்ளது. நீங்கள் முதல் விசாரணையில் சர்வே எண்.751/5, 751/6 ஆகியவற்றில் ஒரே வீடு உள்ளதாக சொல்லியுள்ளீர்கள் என்றால், இரண்டு வீடுகள் ஒன்றாக உள்ளதாக சொல்லியுள்ளேன். இடையில் ஒரு சுவர் மட்டும் உள்ளது. அந்த விபரத்தை எந்த அடிப்படையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் என்னுடைய வீட்டிற்கு எதிரில் உள்ளதால் அந்த அடிப்படையில் சொல்லியுள்ளேன். அந்த விபரம் உங்களுக்கு சர்வே எண் விபரங்கள் தெரியாது என்றும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. உங்கள் வீட்டின் சர்வே எண்ணே உங்களுக்கு தெரியாத நிலையில் பக்கத்து வீட்டின் சர்வே எண் தெரியும் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு வீடுகளுக்கும் ஒரே மின் இணைப்பு உள்ளதாக சொல்லியுள்ளீர்கள், மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. உங்களுக்கு வழக்குச் சொத்து பற்றிய எந்த விபரமும் தெரியாமல் பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதி தங்கமுத்துவின் வீட்டிற்கு வடபக்கத்தில் பிரதிவாதிகள் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வீட்டில் தங்கமுத்து எவ்வளவு நாளாக உள்ளார் என்றால் எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் இருந்து வருகிறார். வாதி தங்கமுத்து வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. 14.07.2023ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு வாதி தங்கமுத்துவுக்கும் உங்களுக்கும் தகராறு நடந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், இல்லை. வாதிதான் மேற்படி பிரச்சனைக்குரிய சர்வே எண்களை யாரிடமும் சொல்லக்கூடாது என சத்தம் போட்டார். அன்றைய தினம் இரவு

10.00 மணிக்கு பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில், வாதி தங்கமுத்து வீட்டிற்கு சென்று தகராறு செய்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அந்த சம்பவத்தில் காயம் அடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த முன்விரோதத்தின் பேரில் வாதி தங்கமுத்துவுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிளீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN
Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.09.12 16:41:20 +0530

District Munsif,
Palani.